©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 39] CHENNAI, WEDNESDAY, OCTOBER 2, 2013
Purattasi 16, Vijaya, Thiruvalluvar Aandu–2044

# Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

*Pages.*

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

Amendments to the Tamil Nadu Electricity Grid Code. .. .. .. 516-519

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

**Amendments to the Tamil Nadu Electricity Grid Code**

NOTIFICATION No. TNERC / GC/ 13-2, Dated 12-09-2013

*(Lr. No. TNERC/DD(L)/F. Notifications/D.No.1380/2013, 19th September 2013)*

**No. VI(2)/207/2013.**

In exercise of the powers conferred under Clause (h) of sub section (1) of Section 86 and Clause (zp) of sub-section (2) of Section 181 of the Electricity Act, 2003 (Central Act 36 of 2003) and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following amendments to the Tamil Nadu Electricity Grid Code.

AMENDMENTS

In the said Code, in regulation 8,-

**(i)** in sub-regulation (3), for Clause (a), the following shall be substituted, namely:-

"(a) **SLDC** will issue despatch instruction required to regulate all generation and imports from **SSGS, IPPs, CPPs** and Generators based on renewable sources of energy according to the hourly day ahead generation schedule, unless rescheduling is required due to unforeseen circumstances. Generation from wind mills shall be scheduled as per the Commission's Intra State Availability Based Tariff (ABT) order or regulation in force";

**(ii)** In sub-regulation (4), in Clause (i), for the expression ***"Scheduling / despatching the generation of all agencies including the Utilities, IPPs, NCES (excluding windmills), Co-Generators, etc. connected to the Grid.",*** the following expression shall be substituted, namely:-

***"Scheduling or despatching the generation of all agencies including the Utilities, IPPs, Generators based on renewable sources of energy, Co-Generators, etc. connected to the Grid.".***

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
19th September 2013.

EXPLANATORY STATEMENT

Tamil Nadu Electricity Grid Code, 2005 excludes wind mills from scheduling. However, Central Electricity Regulatory Commission (Indian Electricity Grid Code) Regulations, 2010 provides for the scheduling of Wind Energy Generators. To ensure stable, secured and economic dispatch of electricity and integrated grid operation, it is proposed to amend the Tamil Nadu Electricity Grid Code in line with CERC Regulations. The proposed amendment seeks to give effect to the above proposal.

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
19th September 2013.

STATEMENT SHOWING EXISTING PROVISION AND THE PROVISION AS AMENDED

| *Existing provision* *(1)* | *Proposed amendment* *(2)* |
|---|---|
| **8. Scheduling and Despatch—** | **8. Scheduling and Despatch—** |
| (1) xxxxxxxx | (1) xxxxxxxx |
| (2) xxxxxxxx | (2) xxxxxxxx |
| (3) The following specific points would be taken into consideration while preparing and finalising the schedules: (a) SLDC will issue despatch instruction required to regulate all generation and imports from SSGS, IPPs, CPPs and NCES (*excluding windmills)* according to the hourly day ahead generation schedule, unless rescheduling is required due to unforeseen circumstances. | (3) The following specific points would be taken into consideration while preparing and finalising the schedules:" (a) SLDC will issue despatch instruction required to regulate all generation and imports from SSGS, IPPs, CPPs and Generators based on renewable sources of energy according to the hourly day ahead generation schedule, unless rescheduling is required due to unforeseen circumstances. Generation from wind mills shall be scheduled as per the Commission's Intra State Availability Based Tariff (ABT) order/ regulation in force." |
| **8.(4) Demarcation of responsibilities** | **8.(4) Demarcation of responsibilities** |
| (i) The SLDC shall have the total responsibility for: | (i) The SLDC shall have the total responsibility for: |
| * Scheduling / despatching the generation of all agencies including the Utilities, IPPs, NCES ***excluding windmills)***, Co-Generators, etc. connected to the Grid. | * Scheduling / despatching the generation of all agencies including the Utilities, IPPs, Generators based on renewable sources of energy, Co-Generators, etc. connected to the Grid. |

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

Chennai-600 008,
19th September 2013.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

*(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./மி.க.வி.(G.C.)/13-2/ 12-9-2013 நாளிட்டது.)*

*(Lr. No. TNERC/DD(L)/F. Notifications/ D.No.1380/2013, 19th September 2013)*

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், **2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/2008) 86** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின் (h ) கூறின் படி மற்றும் **181** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவின் (zp) கூறின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, இதன் மூலம், தமிழ்நாடு மின்கட்டமைப்பு விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைச் செய்கிறது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதித்தொகுப்பில் **8** ஆம் ஒழுங்குமுறைவிதியில்,–

(i) (3) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், (a) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,–

(அ) "(a) மின்பகிர்ந்தனுப்பு மையம், மாநில சுய மின்உற்பத்தி நிலையம், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், சுய உபயோக மின்உற்பத்தியாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஆதாரமாகக் கொண்ட மின்உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து, எதிர்பாராத சூழ்நிலைகளின்பொருட்டு மறுபடியும் திட்டமிடல் தேவைப்பட்டாலன்றி, ஒரு நாளைக்கு ஒவ்வொரு மணி நேரமும் மின்உற்பத்தி திட்டமிடலுக்கு இணங்க, மின்உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் அனைத்தையும் முறைப்படுத்துவதற்கு தேவைப்படும் மின்அனுப்புகை ஏவுரையை ஒரு நாள் முன்னதாக வழங்குதல் வேண்டும். காற்றாலைகளிலிருந்து செய்யப்படும் மின்உற்பத்தி, நடைமுறையிலுள்ள ஆணையத்தின் மாநிலத்திற்குள் கிடைக்கக்கூடியது அடிப்படையிலான மின்கட்டண (ABT) ஆணை/ ஒழுங்குமுறைவிதியின்படி திட்டமிடப்படுதல் வேண்டும்";

(ii) (4) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், (i)ஆம் கூறில், ''மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட மின்பணி நிறுவனங்கள், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், (காற்றாலைகள் நீங்கலாக) மரபு சாரா எரிசக்தி ஆதாரம், இணை–மின்உற்பத்தியாளர்கள் முதலியோர்கள் உள்ளடங்கலாக அனைத்து முகவாண்மைகளின் மின் உற்பத்தி திட்டமிடல் / மின் அனுப்புகை '' என்ற சொற்றொடருக்கு பதிலாக பின்வரும் சொற்றொடர் அமைக்கப்படுதல்வேண்டும், அதாவது :–

''மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட மின்பணி நிறுவனங்கள், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் அடிப்படையிலான மின்உற்பத்தியாளர்கள், இணை–மின்உற்பத்தியாளர்கள் முதலியோர் உள்ளடங்கலாக அனைத்து முகவாண்மைகளின் மின் உற்பத்தி திட்டமிடல் / மின் அனுப்புகை''

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை–600 008,
2013 செப்டம்பர் 19.

**விளக்கவுரை**

2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்கட்டமைப்பு விதித்தொகுப்பு திட்டமிடுதலிலிருந்து காற்றாலைகளை விலக்கியுள்ளது. எனினும், 2010 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (இந்திய மின்கட்டமைப்பு விதித்தொகுப்பு) ஒழுங்குமுறைவிதிகள், காற்றாலை மின்உற்பத்தியாளர்களுக்கான திட்டமிடுதலுக்கு வகைசெய்துள்ளது. நிலையாகவும், பாதுகாப்பாகவும், சிக்கனமாகவும் மின்சாரம் வழங்குவதையும் மற்றும் ஒருங்கிணைந்த மின்கட்டமைப்பு இயக்கத்தையும் உறுதி செய்வதற்கு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய ஒழுங்குமுறைவிதிகளின் வழியில் தமிழ்நாடு மின்கட்டமைப்பு விதித்தொகுப்பை திருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேசிக்கப்பட்ட திருத்தம் மேலேயுள்ள உத்தேசத்திட்டத்தை நடைமுறைபடுத்த முனைவுறுகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை–600 008,
2013 செப்டம்பர் 19.

**இருந்துவரும் வகைமுறையையும் திருத்தம் செய்யப்பட்ட வகைமுறையையும் காட்டும் விவர அறிக்கை**

| *இருந்து வரும் வகைமுறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|
| *(1)* | *(2)* |
| 8. மின்உற்பத்தி திட்டமிடலும் மின்சுமைப் பகுப்பும். | 8. மின்உற்பத்தி திட்டமிடலும் மின்சுமைப் பகுப்பும். |
| (1) x x x | (1) x x x |
| (2) x x x | (2) x x x |
| (3) இத்திட்டங்களைத் தயாரித்து இறுதி செய்யும்போது பின்வரும் தனிக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். | (3) இத்திட்டங்களைத் தயாரித்து இறுதி செய்யும்போது பின்வரும் தனிக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். |
| (a) மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம், மாநில சுயமின்உற்பத்தி நிலையம், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், சுய உபயோக மின்உற்பத்தியாளர்கள், (காற்றாலைகள் நீங்கலாக) மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றிலிருந்து, எதிர்பாராத சூழ்நிலைகளின்பொருட்டு தேவைப்படுமாறு மறுபடியும் திட்டமிடல் தேவைப்பட்டாலன்றி, ஒரு நாளைக்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட ஒரு மணி நேர இடைவெளியில் மின்உற்பத்தித் | (a) மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம், மாநில சுயமின்உற்பத்தி நிலையம், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், சுயஉபயோக மின்உற்பத்தியாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் அடிப்படையிலான மின்உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து, எதிர்பாராத சூழ்நிலைகளின்பொருட்டு மறுபடியும் திட்டமிடப்படல் தேவைப்பட்டாலன்றி, ஒரு நாளைக்கு ஒவ்வொரு மணி நேரமும் மின்உற்பத்தித் திட்டமிடலுக்கு |

**இருந்துவரும் வகைமுறையையும் திருத்தம் செய்யப்பட்ட வகைமுறையையும் காட்டும் விவர அறிக்கை**

| *இருந்து வரும் வகைமுறை* *(1)* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* *(2)* |
|---|---|
| திட்டமிடலுக்கு இணங்க, மின்உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் அனைத்தையும் முறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் மின்அனுப்புகை ஏவுரையை வழங்குதல் வேண்டும். | இணங்க, மின்உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் அனைத்தையும் முறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் மின்அனுப்புகை ஏவுரையை ஒரு நாள் முன்னதாக வழங்குதல் வேண்டும். காற்றாலைகளிருந்து செய்யப்படும் மின்உற்பத்தி நடைமுறையிலுள்ள ஆணையத்தின் மாநிலத்திற்குள் கிடைக்கக்கூடியது அடிப்படையிலான மின்கட்டண (ABT) ஆணை/ ஒழுங்குமுறை விதியின்படி திட்டமிடப்படுதல் வேண்டும்''. |
| 8 (4) பொறுப்புக்களின் பகிர்வு : | 8 (4) பொறுப்புக்களின் பகிர்வு : |
| (i) மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம், பின்வருவனவற்றிற்கு மொத்தமாகப் பொறுப்புடையதாகும். | மாநில மின்சுமை பகிர்ந்தனுப்பு மையம், பின்வருனவற்றிற்கு மொத்தமாகப் பொறுப்புடையதாகும் : |
| * மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட மின்பணி நிறுவனங்கள், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள் (காற்றாலைகள் நீங்கலாக) மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள், இணை–மின்உற்பத்தியாளர்கள், முதலியோர் உள்ளடங்கலான அனைத்து முகவாண்மைகளின் மின்உற்பத்தி திட்டமிடல் / மின்அனுப்புகை. | * மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட, மின்பணி நிறுவனங்கள், தற்சார்பு மின்உற்பத்தியாளர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் அடிப்படையிலான மின்உற்பத்தியாளர்கள், இணை–மின்உற்பத்தியாளர்கள் முதலியோர் உள்ளடங்கலான அனைத்து முகவாண்மைகளின் மின்உற்பத்தி திட்டமிடல் / மின்அனுப்புகை. |

**சி. குணசேகரன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**சென்னை–600 008,**
**2013 செப்டம்பர் 19.**

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU